60

இரண்டாம் தலைதீபாவளி

'கைக்குழந்தையைக் கதற விட்டுவிட்டு இந்தக் காரியம் செய்யாவிட்டால் யார் அடித்தார்கள்? அடுத்த தீபாவளி எங்கே போச்சு, உன் பக்ஷணங் களுக்கும், கோலம்-செம்மண்ணுக்கும்?' என்று சுந்தரம் குழந்தையைச் சமாதானம் செய்ய முடியாமல் தவித்துக்கொண்டே கூச்சல் போட்டான்.

'ஒரு நாள் குழந்தையைச் சமாதானப்படுத்தி வைத்துக் கொள்ளத் தெரியவில்லை! அதட்டலும் மிரட்டலுந்தான் அசாத்தியம்!' என்று மீனு குறும்புச் சிரிப்புடன் சொல்லிக் கொண்டே பக்ஷணத்தட்டுடன் அவனருகில் வந்தாள்.

'கச்சேரி வேலையை நீ கொஞ்சம் செய்யேன் பார்ப்போம். யாராருக்கு எதெதுவோ-?'

'கிடக்கு, இன்னிக்கி ஒரு நாள்தானே? அடுத்த தீபாவளியை யார் கண்டார்கள்? என் உடம்பு இருந்த இருப்புக்கு இன்னிக்கி இந்தப் பக்ஷணத்தை உங்கள் கையில் கொடுப்பேன் என்று நான் நினைக்கவே யில்லை. இன்னிக்கி நமக்கு இரண்டாம் தலை தீபாவளி என்றே சொல்லணும்' என்று மீனு சற்றுக் கண்கலங்கினவளாய்க் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

'உனக்கு இன்னும் உடம்பு சரியாகவில்லையே என்றுதான் சொன்னேன்.'

'நல்ல நாளை மூளியாக்கலாமோ? நாளைக்குப் பூராவும் படுத்துத் தூங்கினால் போறது! ஏதுக்காக உங்களை நச்சரித்துச் சரிகை வேஷ்டி வாங்கிக்கச் சொன்னேன்? ஏன் வெறுமனே உட்கார்ந்திருக்கேள்? மைசூர்ப் பாகு எப்படி இருக்கிறது பாருங்கள்; நிறைய நெய்யைக் கொட்டி இருக்கிறேன்!' என்று மீனு பக்கத்திலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு குழந்தையைச் சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

சுந்தரம் திடீரென்று ஏதோ நினைப்பில் ஆழ்ந்து விட்டான்.

கல்யாணமான மூன்று மாசங்களுக்குள் சுந்தரத்தின் தாய் காலமாகி

கல்கி, தீபாவளி மலர், அக்டோபர்-1942

விட்டதால் தலை தீபாவளி கிடையாதென்றே அவன் மாமனார் வீட்டினர் நினைத்தார்கள். ஆனால் சுந்தரத்தின் தகப்பனார் தம் மகனை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே தலை தீபாவளிக்கு அனுப்புவதாகச் சம்பந்திகளுக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

சுந்தரம் மாமனார் வீட்டுக்கு வந்த இரண்டு நாட்களும் மீனு அவன் கண்ணிலேயே படவில்லை. அவன் அவளைப் பார்க்க ஏங்கி ஏங்கிப் பொறுமையற்றுப் போனான். தாய் காலமாகிய புதிதாகையால் அந்த நினைப்பு இன்னும் மனத்தைவிட்டு அகலவில்லை; ஆனால் அந்தத் துக்கநினைவுடனேயே, மீனுவைக் காணவேண்டுமென்ற சுகநினைவாகிய ஆவலும் கலந்து அவன் உள்ளத்தில் கொந்தளித்தது. மழை நடுவிலே தென்படும் சூரிய ஒளிபோல் அது இன்னும் கொஞ்சம் அதிக மனோகரமாக இருக்குமோ?

உண்மையில் அவ்வித நினைப்புக்களும் மாறிமாறி அவன் உள்ளத்தில் தலையெடுத்தன. நினைவு தெரிந்தது முதல் தனக்கு நெருக்கமாக இருந்த ஒரு முகம் மறைந்து மூன்று மாசங்கள் ஆகவில்லையே! அதற்குள் அதை மறந்து மற்றொரு புது முகத்தை நாடுகிறதே இந்த உள்ளம்? – என்று மனச்சாட்சி தாக்குவதுபோல ஒரு நிமிஷம் தவிப்பான். கல்யாணச் சந்தர்ப்பத்தில் கையைப் பிடித்த பொழுது மீனுவினுடைய நடுங்கிய கைமூலம், தனக்கு அறிமுகமான அவள் உள்ளக் கிளர்ச்சி, இப்போது அவளுக்கு அவ்வளவு அருகில் இருந்தபடியால், நிமிஷத்துக்கு நிமிஷம் நினைவுக்கு வந்தது. அப்போதெல்லாம் அவனால் அடக்க முடியாத ஓர் ஆவல் அவனை வேறு நினைப்பற்றவனாகச் செய்தது. தாய்முகத்தையும் மறைத்துக் கொண்டு அந்தத் தளிர்முகம் முன்வந்து நின்றது அவனுடைய தவறா? எப்பேர்ப்பட்ட சோகத்தின் இடையிலும் பாய்ந்து இடம் பெறக்கூடியது சுகம் என்றல்லவோ இயற்கையின் விதி அமைந்திருக்கிறது!

தீபாவளியன்று அதிகாலையில் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பொழுது மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றும் அவன் உள்ளத்தில் இல்லாததைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். மீனு மிகப் பயத்துடன் அவன் முகக்குறியை அடிக்கடி கடைக் கண் பார்வையால் கவனித்தாள். 'நாட்டுப் பெண் அடி எடுத்துவைத்த முகூர்த்தம், மாமியார்–' என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்களே, அந்த மாதிரித் தன்மேல் கணவனுக்கு ஏதாவது வெறுப்பு இருக்குமோ என்பது அவள் கவலை. சுந்தரத்தின் முகம் சுகபோதை அடைந்திருப்பதைப் பார்த்து அவள் அகமகிழ்ந்தாள்.

ஸ்நானம் முடித்து அவன் புதுவேஷ்டி கட்டிக் கொண்டு மாடியில் மேஜையருகில் உட்கார்ந்திருந்தான். மீனு இடது கையில் பக்ஷணத் தட்டும் வலது கையில் காப்பித் தம்ளருமாக வந்தாள். தம்ளரும்

கையுமாக அவள் சற்றுத் தயங்கிப் படியருகில் நின்றாள்.

அவன் நினைவிழந்தான். அவன் கண்களில் நீர் மளமளவென்று பெருகிற்று.

படுத்த படுக்கையாகக் கிடந்த போது அவன் தாய் சொன்னது திடீரென்று அவனுக்கு ஞாபகம் வந்தது:

'அடே சுந்து, ஏண்டா இப்படிக் கல்யாணம் வாண்டாம்னு பிடிவாதம் பிடிக்கறே. ஒரு தம்ளர் ஜலம் நீ ஸ்வாதீனமாகக் கேட்டு வாங்கிக் கொள்ள ஒருத்தி ஆத்துக்கு வந்தால்தான் என் கட்டை வேகுமடா!'

அந்தத் தம்ளருடன் எதிரே ஒருத்தி வந்து நின்றாள். இரண்டு நாட்களாக அவனை ஆட்டிவைத்த ஏக்கம் மறைந்தது. அவளை ஏகாந்தமாகக் கண்டதும் அவன் அடையவேண்டிய அளவில்லாத மகிழ்ச்சி தென்படவே இல்லை.

மீனு அளவுகடந்த ஆவலை அடக்கிக்கொண்டு வெட்கத்தைச் சற்று வென்று, முதல் முதலாக அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். எந்தக் கணமும் அவன் தாவி எழுந்துவந்து தன் கையைப் பிடித்துக் கொண்டுவிடுவான் என்று எதிர்பார்த்து அதற்குத் தயாராகவே நின்றாள். ஒவ்வொரு கணமும் அவன் கை தீண்டுவதன் தித்திப்பை அநுபவிக்க எண்ணி ஏமாந்தாள்.

சுந்தரம் அசைவற்று உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் சோகம் திடீரென்று அலைபோல் பாய்ந்து பரவிற்று. அத்தியந்தமான சுக நிலைமையில், முன்போ பின்போ உண்டான ஒரு துக்கநினைவு தோன்றுவானேன்? மாங்கல்ய தாரணத்தின்போது பெண்ணின் பெற்றோர் பொருமுவானேன்? அந்தச் சோகத்தின் சாயையால்தான் மகிழ்ச்சியே மேன்மைப்படுகிறதோ?

மீனுவின் முகம் விழுந்தது. வெட்கத்தால் வியர்வை தோன்றி அசடு தட்டின முகத்துடன் தட்டையும் தம்ளரையும் இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுக் கீழே இறங்கத் திரும்பினாள்.

சுந்தரம் தூக்கிவாரிப் போட்டதுபோல, எழுந்து பாய்ந்தான்.

'மீனு! இந்தா, ஏன் போகிறாய்!'

மீனு திரும்பிக் கணவன் முகத்தை மறுபடியும் பார்த்தாள். ஒரு கணத்திற்குமுன் அதில் தென்பட்ட சோகம் இருந்த இடம் தெரியவில்லை. கண்ணீர் வழியும் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஓடிவந்து அவன் அவள் கையைப் பிடித்துக்கொண்டான்.

'என்ன கோபம் உனக்கு?'

'ஒன்றுமில்லையே!'

'பின், ஏன் பேசாமல் திரும்பிப் போகிறாய்?'

மீனு அதற்குள் அவன் ஸ்பரிசத்தால் ஏற்பட்ட உணர்ச்சியை ஒருவாறு அநுபவித்துச் சுதாரித்துக் கொண்டுவிட்டாள்.

வெட்கமும் மகிழ்ச்சியும் சேர்ந்து உண்டாக்கிய புன்னகையுடன், 'நீங்கள்தான்–' என்று ஆரம்பித்து நிறுத்திவிட்டாள்.

சற்றுமுன் தான் அநுபவித்த உள்ள நிகழ்ச்சியின் அறிவு, அவள் சுட்டிக்காட்டின பிறகுதான் சுந்தரத்துக்கு ஏற்பட்டது.

'ஆமாம், ஆமாம்! மீனு, நான்தான் பேசவில்லை–பேச முடிய வில்லை!' என்று சொல்லிக் கொண்டே தம்ளரை எடுத்துக்கொண்டு அவளை மேஜையருகில் கூட்டிக்கொண்டு போனான்.

'பேச முடியவில்லையா, ஏன்? கண்களில் ஏன் அவ்வளவு ஜலம்?' என்று கவலையும் கொஞ்சுதலும் தோன்றிய குரலில் கேட்டாள்.

'மீனு வா, உட்காரு; சொல்லுகிறேன்!' என்று சுந்தரம் நாற்காலியில் உட்கார்ந்து அவளைப் பலவந்தமாக மடிமேல் இருத்திக் கொண்டான்.

மீனு உடனே அவன் கையிலிருந்த தம்ளரை வாங்கி அவன் வாயருகில் கொண்டுபோய், 'பசிக்கல்லே?' என்று பசப்பினாள்.

'எனக்குத் தம்ளர் ஜலம் கொடுக்க வந்துவிட்டாய், மீனு! அம்மா இல்லை பார்க்க!'

மீனுவின் குதூகலமும் சட்டென்று நின்றது; மாமியார் அன்று சொன்னது அவளுக்கு நினைவு வந்தது. கல்யாணமாகிச் சம்பந்திகள் ஊருக்குப் புறப்படும் போது, அப்பொழுதே படுத்த படுக்கையாகி யிருந்த மாமியாருக்கு மீனு நமஸ்காரம் செய்தாள்.

'மீனாக்ஷி! வீடு நிறையக் குழந்தைகளைப் பெத்துக்கிண்டு நன்னா இரு. உன் ஆம்படையான் அப்பாவி–பசி என்று சொல்லமாட்டான்–கவனிச்சுச் சமயமறிஞ்சு அவனுக்குச் செய்! உன் மாமனாரையும் பார்த்துக்கோ. அநாதை! புத்தியா இரு... நல்ல பேர் எடு!–அவ்வளவு தான்!'

மாமியார் வார்த்தைகள் நினைவு வரவே, மீனுவுக்கும் கண்களில் ஜலம் வந்துவிட்டது. தன் முன்றானையை எடுத்துக் கணவன் கண்களைத் துடைத்துக் கொண்டே பெரிய மனுஷிபோல், 'என்ன செய்வது? நாம் கொடுத்து வைக்கவில்லை!' என்றாள்.

'மீனு, அவள் பிடிவாதத்தால்தான் நான் இன்று உன்னை மடியில் உட்கார வைத்துக்கொண்டிருக்கிறேன். அவள் போனாலும் எனக்கு ஆதரவு உலகத்தில் உண்டு என்று அவள்தான்–'

'காப்பியைக் குடியுங்கள்!'

'இந்தக் காப்பித் தம்ளரும் கையுமாகப் பதுமை போல் நீ என் முன்னால் நின்றதும் அவள் சொன்னது ஞாபகத்துக்கு வந்துவிட்டது. அதனால்தான் ஒரு நிமிஷம் மெய்ம்மறந்து போனேன்; பேசவில்லை.

'உங்களுக்குக் கோபமாக்கும்னு நினைச்சுட்டேன்!' என்றாள் மீனு, பெண் சாதுரியத்துடன்.

'கோபமுந்தான்–நீ ஏன் இரண்டு நாளாய் என் கண்ணிலேயே

படவில்லை?'

'வெறுமனேதான்!' என்று சொல்லி அவள் சிரித்தாள்.

'உன்னை என்ன செய்தால் தேவலை?'

'செய்வேள்!' என்று மீனு தலையை ஆட்டினாள்.

'செய்தால்?' என்று சுந்தரம் அவளை இறுகப் பிடித்தான்.

'அப்புறம் தெரியும்!'

★★★

'பக்ஷணத்தைச் சாப்பிடாமே ஏன் இப்படி உக்காந்திருக்கேள்? பாலு கூடத் தூங்கிப்போய் விட்டானே!'

'ஓகோ, மறந்தே போய்விட்டேன்! என்னவோ ஞாபகம். இரண்டாம் தலை தீபாவளி என்றாயல்லவா?–'

'தலை தீபாவளி ஞாபகம் வந்துவிட்டதாக்கும். அப்படிச் சொல்லுங்கள்!'

'மீனு, இங்கே வாயேன் சற்று!'

'சரிதான், யாராவது பார்த்தால் சிரிக்கப்போறா!'

'தலை தீபாவளி என்றாயே!'

'ஆமாம். பாலுவைப் பார்த்துக்கோங்கோ! இதோ காப்பி கொண்டு வறேன்!' என்று சொல்லி மீனு சிரித்துக்கொண்டே சமையலறைப் பக்கம் போனாள்.

●